


19.01.2025

தலைப்புச்செய்திகள்

- விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.
- இயற்கை பேரிடர்களில் தேசிய பேரிடர் மீட்பு படையினரின் பங்களிப்பு மகத்தானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா கூறியுள்ளார்.
- தமிழகத்தில் மெட்ரோ ரயில் திட்ட பணிகளுக்காக 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை அரசு ஒதுக்கியுள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.
- நெல்லை கன்னியாகுமரி தூத்துக்குடி ராமநாதபுரம் தென்காசி மாவட்டங்களில் இன்று மிக கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- புதுதில்லியில் உலக கோப்பை கோ கோ ஆடவர், மகளிர் இறுதி ஆட்டங்களில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

************

மன்-கீ-பாத்

விண்வெளி தொழில்நுட்பத்தில் இந்தியா புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இந்தாண்டின் முதல் மன்-கீ-பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 118-வது முறையாக இன்று உரையாற்றிய பிரதமர், தொலைநோக்கு பார்வையுடன் எதிர்கால சவால்களை சமாளிக்கும் வகையில் இந்திய விஞ்ஞானிகள் பணியாற்றிவருவதாக கூறினார்.

இந்திய விண்வெளி தொழில்நுட்ப ஸ்டார்ட் அப் நிறுவனமான Pixxel, நாட்டின் முதல் தனியார் செயற்கைகோளை செலுத்தியதற்கு பாராட்டு தெரிவித்த பிரதமர், இது உலக அளவில் விண்வெளி துறையில் இந்தியாவின் முன்னனி நிலையை எடுத்துக்காட்டுவதாக தெரிவித்தார்.

இஸ்ரோ விஞ்ஞானிகள் விண்வெளியில் விதைத்த கௌபரி விதைகள் முளைவிட்டதை சுட்டிக்காட்டிய பிரதமர், விண்வெளியில் உற்பத்திக்கான புதிய தொழில்நுட்ப ஆராய்ச்சியில் சென்னை ஐஐடியின் Extem மையம் ஈடுபட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

இதன்மூலம் ககன்யான் திட்டம், எதிர்கால விண்வெளி நிலைய உருவாக்கம் உள்ளிட்டவைகள் வலுப்படும் என்றார்.

விண்வெளியில் செயற்கைகோள்களை இணைக்கும் Space docking தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய நான்காவது நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இளம் தொழில்முனைவோருக்கு நாட்டு மக்களின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

75ஆவது குடியரசு தினம் வரும் 26ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் அரசியல் அமைப்பை உருவாக்குவதில் மிக முக்கிய பங்காற்றிய டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார், டாக்டர் ராஜேந்திரபிரசாத், டாக்டர் சியாமபிரசாத் முகர்ஜி ஆகியோரின் பங்களிப்பை நினைவு கூர்ந்தார்.

தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்ட ஜனவரி 25ஆம் தேதி தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் இந்தியா ஜனநாயகத்தின் தயாகமாக திகழ்வதாக பெருமிதம் தெரிவித்தார்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நாட்டில் நியாயமான வெளிப்படையான தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் நடத்தி வருவதற்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

வாய்ஸ்

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா சமத்துவம் நல்லிணக்கத்தின் மிகப்பெரிய சங்கமம் என்று கூறிய பிரதமர், பண்முக தன்மையில் ஒற்றுமையை இவ்விழா எடுத்துரைப்பதாக தெரிவித்தார்.

பிரயாக்ராஜ், உஜ்ஜைன், நாசிக் மற்றும் ஹரித்துவாரில் கும்பமேளா நடைபெறும் அதேவேளையில், கோதாவரி, கிருஷ்ணா, நர்மதா, காவிரி நதிக்கரைகளில் புஷ்கரம் நடத்தப்படுவதாக கூறினார்.

இத்தகைய விழாக்கள், நல்லிணக்கம் சமூக ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதாகவும், இந்நிகழ்வுகளில் இளம் தலைமுறையினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் நம்மை சுற்றியுள்ள விலங்குகள் மற்றும் பறவைகளுடன் ஒன்றிணைந்து வாழ கற்பிப்பதாக எடுத்துரைத்த பிரதமர், சட்டிஸ்கட், மத்திய பிரதேசத்தில் புதிய புலிகள் காப்பகம் உருவாக்கப்பட்டுள்ளதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் 10ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதாக கூறிய பிரதமர் பெரு நகரங்கள் மட்டுமல்லாது சிறு குறு நகரங்களிலும் இது விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்மூலம் இளைஞர்களிடையே புதுமை, படைப்பாற்றல், அர்ப்பணிப்புடன் கூடிய செயலாற்றல் உள்ளிட்டவை வளர்ந்து வருவதாக எடுத்துரைத்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் பிறந்த நாளான வரும் 23ஆம் தேதி பராக்கிரம தினமாக கொண்டாடப்பட உள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் நேதாஜியின் துணிச்சல், தொலைநோக்கு பார்வை உள்ளிட்டவை இன்றளவும் நினைவு கூறப்படுவதாக தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் மேம்பாடு, சமூகசேவை உள்ளிட்டவைகளில் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறிய பிரதமர் மன நலம் பாதிக்கப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றோர், முதியோர் சேவை, போதை பொருளுக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் செயல்படும் சமூகசேவையாளர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

பழங்குடியினரை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தினார்.

************

முருகன் - மன்கீபாத்

பிரதமரின் மனதின் குரல் நிகழ்ச்சியை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கோயம்புத்தூரில் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து பார்வையிட்டார்.

தொடர்ந்து உதகை மற்றும் மதுரையில் இன்று நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் டாக்டர் எல்.முருகன் பங்கேற்கிறார்.

************

அமித்ஷா

தேசிய பேரிடர் மீட்பு படையின் 20ஆம் ஆண்டு நிறுவன நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் இயற்கை பேரழிவுகள் மற்றும் கடினமாக சூழல்களில் இப்படையினரின் பங்களிப்பு மகத்தானது என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பில் இவர்களது சேவை அளப்பரியது என்று பாராட்டியுள்ளார்.

ஆந்திர பிரதேச மாநிலம் விஜயவாடாவில் 200 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டிய திரு.அமித்ஷா ஹைதராபாத்தில் உள்ள தேசிய காவல் அகாடமியில் ஒருங்கிணைந்த உள் அரங்க துப்பாக்கி சூடு மைதான கட்டுமான பணிகளையும் தொடங்கிவைத்தார்.

************

அஸ்விணி வைஷ்ணவ்

சுவிட்சர்லாந்து டாவோஸில் நாளை தொடங்க உள்ள உலக பொருளாதார கூட்டமைப்பின் வருடாந்திர கூட்டத்தில் மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஸ்விணி வைஷ்ணவ் பங்கேற்க உள்ளார்.

5 நாட்கள் நடைபெறும் இக்கூட்டத்தில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, தொழில்நுட்பம், மின்னணு உள்கட்டமைப்பு, உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

************

EPFO

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி கணக்குகளை பணியாளர்கள் வேறு நிறுவனத்திற்கு மாற்றும்போது பழைய நிறுவன தலைவர்கள் மூலம் பரிமாற்ற கோரிக்கைகளை அனுப்பும் நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாக இந்நிறுவனம் கூறியுள்ளது.

இதன்மூலம் 3 லட்சத்து 90 ஆயிரம் உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள்.

இதன்மூலம் உறுப்பினர்களின் கோரிக்கைகள் உடனடியாக தீர்க்கப்படுவதோடு தரவு நிலைத்தன்மையை முறையாக உறுதி செய்ய முடியும்.

************

தங்கம் தென்னரசு

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் பரந்தூர் விமான நிலையம் முக்கிய பங்குவகிக்கும் என்று மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் சென்னை விமான நிலையத்தில் இருந்து தற்போது நாளொன்றுக்கு 60 ஆயிரம்பேர் பயணிப்பதாகவும், இந்த எண்ணிக்கை அடுத்த 10 ஆண்டுகளில் 8 கோடியாக அதிகரிக்கும் என்பதால் பரந்தூர் விமான நிலையத்தின் தேவை முக்கியத்துவம் வாய்ந்தது என்றார்.

தமிழகத்தில் நடைபெறும் மெட்ரோ திட்ட பணிகளுக்கென தமிழக அரசு 26 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

************

ஈரோடு இடைத்தேர்தல்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் வேட்பு மனுக்களை திரும்ப பெற நாளை கடைசி நாளாகும்.

இதனையடுத்து இறுதி வேட்பாளர் பட்டியல் நாளை வெளியிடப்படுவதோடு, வேட்பாளர்களுக்கான சின்னமும் ஒதுக்கப்படும்.

இதனிடையே ஈரோடு ரங்கம்பாளையத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி இன்று நடைபெற்றதாக மாநகராட்சி ஆணையரும் தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு.மணீஷ் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

************

எடப்பாடி

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று ஒரே நாளில் மட்டும், காவல்துறையில் பணியாற்றுவோர் உள்ளிட்ட 8 பேரிடம் நகை பறிப்பு சம்பவங்கள் நடைபெற்றதாக தமது சமூகவலைதள பதிவில் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டில் காவலர்கள் உட்பட யாரும் பாதுகாப்பாக நடமாட முடியாத சூழல் உள்ளதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

குற்றசம்பவத்தில் ஈடுபடும் குற்றவாளிகள் மீது மாநில அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

************

அண்ணாமலை

தமிழகத்திற்கு உரிய நிதியை மத்திய அரசு வழங்கி வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக 36 பக்கம் கொண்ட வெள்ளை அறிக்கையை மீண்டும் அளிக்க தயாராக உள்ளதாக கூறினார்.

திருக்கோவில்களில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மாநில அரசு செய்து தர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

************

இருவரி

பொங்கல் பரிசு தொகுப்பு பெறாத குடும்ப அட்டை தாரர்கள் வரும் 25ஆம் தேதிவரை அவற்றை பெற்றுக்கொள்ளலாம் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

திருவாரூரில் மூன்றாவது புத்தக திருவிழா வரும் வெள்ளிக்கிழமை முதல் அடுத்த மாதம் 2ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சாருஸ்ரீ கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை 50ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் e-DPC வலைதளத்தில் பதிவு செய்துகொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் திறன்மிகு மின் மோட்டார்களை பொருத்துவதற்கு 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன் ஜித் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

************

கோவில்

நெல்லை மாவட்டம் களக்காடு தலையணையில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து இன்று சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

குற்றால அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

************

வானிலை

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக திருநெல்வேலி கன்னியாகுமரி தூத்துக்குடி ராமநாதபுரம் தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கன, மிககன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோரபகுதிகள், குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மன்னார்வளைகுடா பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

************

கோ கோ

புதுதில்லியில் நடைபெறும் உலக கோப்பை கோ கோ ஆடவர் மற்றும் மகளிர் இறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

************

கிரிக்கெட்

கோலாலம்பூரில் இந்திய - வெஸ்ட் இண்டிஸ் அணிகளுக்கு இடையேயான 19 வயதிற்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

45 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்தியா 5ஆவது ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 47 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

************

டென்னிஸ்

மெல்பர்னில் நடைபெறும் ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் ரோஹன்போபன்னா, சீனாவின் Shuai Zhang இணை முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற இருந்த காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் காயம் காரணமாக அமெரிக்காவின் Taylor Townsend மொனாகோவின் Hugo Nys- இணை வெளியேறியதை அடுத்து போபன்னா இணை காலிறுதிக்கு தகுதிபெற்றது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

************